

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் கழக வேட்பாளர் வழக்கறிஞர் சுகன்யாவை ஆதரித்து மதுரை மாநகர் மாவட்ட திமுக சார்பில் கன்னிவாடி பேரூராட்சி பகுதியில் மாவட்ட செயலாளர் கோ.தளபதி தலைமையில் மாநில தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஆர். கோபாலகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் வீடு வீடாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகள் சேகரிக்கப்பட்டது, உடன் கழக நிர்வாகிகள் ஏ.கே.ஆறுமுகம், முத்து கணேசன், முகேஷ் சர்மா, ஆர்.எம். முத்து உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

துப்புரவுத் தொழிலாளர்கள் போராட்டத்தின் மூலம் பெற்ற சம்பள உயர்வுக்கு

முதல்வர் ரங்கசாமி சொந்தம் கொண்டாடுவது அரசியல் நாடகம்!

தி.மு.க. மாநில அமைப்பாளர் இரா.சிவா குற்றச்சாட்டு!

புதுச்சேரி, அக். 5 - புதுச்சேரி மாநில திமுக சார்பு துப்புரவுத் தொழிலாளர்கள் தங்களுக்கான குறைந்தபட்ச கூலி உயர்வை தொடர்ந்து போராடி பெற்றதை முதல்வர் ரங்கசாமி சொந்தம் கொண்டாடுவது அரசியல் உள்நோக்கம் கொண்டது என திமுக அமைப்பாளர் இரா. சிவா குற்றம்சாட்டி உள்ளார்.

இது தொடர்பாக



அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

காந்தி ஜெயந்தியை முன்னிட்டு கம்பன் கலையரங்கில் நடைபெற்ற அரசு விழாவில், துணை நிலை ஆளுநருடன் பங்கேற்ற முதல்வர் ரங்கசாமி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு நாள் கூலி ரூ. 424 ஆக உயர்த்தி வழங்கியைப் பற்றி பெருமை பேசி உள்ளார். இதில் அவருக்கு எந்த உரிமையோ, பங்கோ இல்லை. கடந்த ஆட்சியில் சட்டமன்றத்தில் பேசிய இவர் அமைப்புசாரா தொழிலாளர் அனைத்துப் பிரிவினருக்கும் குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்கப் பட்டதாகக் கூறினார். ஆனால் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலியே இவர் அரசு நிர்ணயிக்க வில்லை. அது பற்றி திமுக துப்புரவுத் தொழிற்சங்கம் குறைந்த பட்ச கூலி வழங்க வேண்டி முதல்வருக்கு மனு அளித்த துடன், சட்டமன்றம் எதிரில் கண்டன ஆர்ப்பாட்டம்நடத்திவலியுறுத்தியது.

தொடர்ந்து துணை நிலை ஆளுநரை சங்கப் பிரதிநிதிகள் சந்திக்க நேரம் கேட்டபோது, ஆளுநர் மறுத்துவிட்டார். பின்பு சங்கத்தின் சார்பில் டெல்லியில் உள்ள சஃபாய் கரம்சாரியின் தேசிய தலைவரை தொடர்பு கொண்டு பிறகு குறைந்தபட்ச கூலியை நிர்ணயித்து வழங்க மாவட்ட ஆட்சியர், உள்ளாட்சித்துறை இயக்குநர், தொழிலாளர் ஆணையர் ஆகியோருக்கு அறிவுறுத்தி கடிதம் அனுப்பினார். அதனைத் தொடர்ந்து சங்கப் பிரதிநிதிகள் மாவட்ட ஆட்சியர், இயக்குநர், ஆணையர் ஆகியோரை பல முறை நேரில் சந்தித்து வலியுறுத்தியதின் விளைவாக தொழிலாளர் ஆணையர் கூட்டிய கூட்டத்தில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு குறைந்த பட்ச கூலி நிர்ணயிக்கப் பட்டது. அதன் அடிப்படையில் சென்ற மே மாதம் உள்ளாட்சித் துறை இயக்குநர் அலுவலகம் ரூ. 424 வழங்க அரசாணையை வெளியிட்டு ஜூன் முதல் செயல்பாட்டுக்கு வந்தது. இது திமுக சார்பு தொழிற்சங்கத்தின் ஓராண்டு போராட்டமே தவிர ரங்கசாமிக்கு இதில் எள்ளளவும் பங்கில்லை.

முதல்வர் ரங்கசாமி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு ஏதாவது செய்ய நினைத்தால் தமிழகத்தில் மு.க.ஸ்டாலின் அவர்கள் முதல்வராக இருந்தபொழுது நிறைவேற்றப்பட்ட காலை உணவுத் திட்டத்தை நிறைவேற்றலாம். துப்புரவுத் தொழிலாளர் சங்கம் முன்னமே முதல்வர் ரங்கசாமி அவர்களுக்கு கொடுத்த கோரிக்கைகளான இலவச பேருந்து கட்டணம், இன்சூரன்ஸ் திட்டம், மாற்றுத் தொழிலுக்கு கடனுதவித் திட்டம் போன்ற வைகளை நிறைவேற்றலாமே தவிர எங்கள் சங்கம் வென்றெடுத்த சாதனையை இவர் சொந்தம் கொண்டாடுவது அரசியல் உள்நோக்கம் கொண்டதாகவே உள்ளது.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

சென்னை வடகிழக்கு மாவட்டப் பிரதிநிதி டி.எஸ்.இளங்கோ துணைவியார்

இ.அம்சவேணி சாலை விபத்தில் பலி!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, அக். 5 - சென்னை வடகிழக்கு மாவட்டக் கழக பிரதிநிதி. டி.எஸ்.இளங்கோ எண். 9 ஸ்ரீராமன் சாலை தணிகாசலம் நகர் பொன்னியம்மன்மேடு சென்னை 110 எனும் முகவரியில் வசித்து வருகிறார்.

நேற்று முன்தினம் (4.10.2026) மதுராந்தகத்தில் தலைவர் பங்கேற்ற கூட்டத்தில் பங்கேற்று விட்டு அங்கே உள்ள தனது மகள் வீட்டில் மனைவியுடன் தங்கி விட்டு நேற்று காலை 7.00 மணிக்கு அவரும் அவரது மனைவியுமான (திருமதி. இ.அம்சவேணி (வயது 58) இருவரும் இருசக்கர வாகனத்தில் மதுராந்தகத்தில் இருந்து சென்னை திரும்பும் போது செங்கல்பட்டு அருகே பின்னால் வந்த லாரி மோதியதில் அவரது மனைவி உடல் நசுங்கி பலியானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.



மாவட்டப் பிரதிநிதி இளங்கோ லேசான காயங்களுடன் உயிர்தப்பினார்.

தகவல் அறிந்து மறைந்த அன்னாரது உடலுக்கு கழகத்தினர் ஏராளமானோர் மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

இவர்களுக்கு பொன்னரசி வயது 34, மலர்விழி வயது 32 என்கிற இரண்டு மகள்கள் உள்ளனர்.

தகரம்....

திடகாத்திரமான ஒருவரால் எப்படி
இதுபோல அந்தர் பல்டிகளை அடிக்க
முடிகிறது என்னும் ஆதங்கத்தைதான்
முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்
வெளிப்படுத்தினார்.

உடனே அதனை உருவக்கேலி
என்கின்றனர்.

பொது இடத்தில் தொடங்கி புனித
மிக்க சட்டப் பேரவை வரை தலையை
வெட்டுவது போன்ற
அருவருக்கத்தக்க உடல்மொழி
கேலிகளை செய்கிற
மலிவான மனிதர் விஜய் தான்...

ஆக

தங்கத்தை
தரம் பார்த்து சொல்லும் தகுதி
உறைகல்லுக்கு உண்டே தவிர



துருப்பிடித்த தகரத்துக்கு கிடையாது
என்பதே உண்மை ..



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்





மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல், கருங்குழி பகுதியில், வேட்பாளர் இ .பரந்தாமனுக்கு, சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர். ஆர்.டி.மதன் தலைமையில், குமரி மேற்கு மாவட்ட மேல்புறம் ஒன்றிய முன்னாள் செயலாளர். சிற்றார் எஸ்.ரவிச்சந்திரன் , கடையல் பேரூராட்சி முன்னாள் துணைதலைவர் மனோகரன், குமரி மாவட்ட டாஸ்மாக் தொ.மு.ச. நிர்வாகி சாபு, குலசேகரம்லெனின் ஆகியோர் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

சந்தி சிரிக்கும் சட்டம் – ஓழுங்கு!

செயலற்ற விஜய் ஆட்சியில் கொலை, கொள்ளைகள்!

(03.10.2026)



1. ஓசூரில் 15 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை அளித்த கல்வித்துறை பயிற்சியாளர் போக்சோ சட்டத்தில் கைது.

பள்ளியில் தேர்வு எழுத விடமாட்டேன் என கல்வித்துறை பயிற்சியாளர் மிரட்டல் - பெற்றோர் அதிர்ச்சி.

2. கரூர் மாவட்டம் தரகம்பட்டியைச் சேர்ந்த விவசாயிகள் நாகராஜ், சுரேஷ் இருவரை அதிகாலையில், வீடுபுகுந்து போலீஸார் கைது செய்ததால் பரபரப்பு.

பொய் வழக்கில் விவசாயிகளை கைது செய்திருப்பதாக கண்டனம் தெரிவித்து விவசாய சங்கத்தினர் சாலை மறியல் போராட்டம்.



3. த.வெ.க. சென்னை மாவட்டச் செயலாளர் வேல்முருகன் மீது தவெக இளைஞரணி அமைப்பாளர் சுரேந்தர் பரபரப்பு புகார்.

கட்சியில் பொறுப்பு தருகிறேன் என கூறி பெரும் தொகையை பெற்றுக்கொண்டு ஏமாற்றிவிட்டதாக த.வெ.க. மாவட்டச்செயலாளர் மீது புகார்.

மனைவிக்கு அரசு வேலை வாங்கிக்தருவதாக கூறி பணம் பெற்றுக் கொண்டு த.வெ.க. மாவட்டச்செயலாளர் மோசடி செய்து விட்டதாகவும் குற்றச்சாட்டு.



த.வெ.க. சென்னை மாவட்டச் செயலாளர் வேல்முருகன் பயன்படுத்தும் காருக்கு EMI கட்டினேன்; ஆனால் என்னை ஏமாற்றிவிட்டனர் .

த.வெ.க. மாவட்டச் செயலாளர் அப்பு வேல்முருகன் எனக்கு கொலை மிரட்டல் விடுக்கிறார் என புகார்.

4 . காட்டுமன்னார்கோவில் அருகே வெளிநாட்டில் வேலைக்கு அனுப்பிய விவகாரத்தில் கொடுத்த பணத்தை திருப்பிக் கேட்டு வந்தவர்களுக்கும், ஏஜெண்டுக்கும் இடையே ஏற்பட்ட தகராறில், ஏஜெண்டை வீடு புகுந்து குண்டுகட்டாக தூக்கி காரில் கடத்திச் சென்ற சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக தவெக ஒன்றிய செயலாளர் உள்பட 7 பேரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



பரத் சூர்யாவை கடத்தியதாக காரைக்குடியை சேர்ந்த அபிராஜ் (24), அவரது தந்தை சுப்பிரமணியம் (50), கார் ஓட்டுநர் பிரபு (30), கணேசன் (40), வினித் (22), நாகராஜன் (25), காளீஸ்வரன் (26) ஆகிய 7 பேரை போலீசார் கைது செய்தனர்.

இதில் காளீஸ்வரன், சிவகங்கை மாவட்டம் சாக்கோட்டை த.வெ.க. ஒன்றிய செயலாளராக இருப்பதாகவும், கார் ஓட்டுநர் பிரபு மற்றும் வினித் ஆகியோரும் தவெக நிர்வாகிகள் எனவும் போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஸ்கார்பியோ காரையும் போலீசார் பறிமுதல் செய்து, கைது செய்யப்பட்ட 7 பேரிடமும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

வெளிநாட்டு வேலைக்காக பெறப்பட்ட பணத்தை திருப்பிக் கேட்கப்பட்ட விவகாரத்தில் ஏற்பட்ட பிரச்சினை, ஆள் கடத்தல் வரை சென்ற சம்பவம் காட்டுமன்னார்கோவில் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது

தாராபுரத்தில் விஜய் பிரச்சாரத்திற்கு

லாரி உள்ளிட்ட வாகனங்களில் அழைத்து வரப்பட்ட மக்கள்!

திருப்பூர், அக். 5 - தாராபுரத்தில் விஜயின் பிரச்சாரத்திற்காக வெளி மாவட்டங்களில் இருந்து லாரிகள் உள்ளிட்ட வாகனங்களில் மக்களை பணம் கொடுத்து தவெகவினர் அழைத்து வந்துள்ளனர்.

இடைத் தேர்தல் நடைபெற உள்ள மதுராந்தகம் மற்றும் தாராபுரம் தொகுதி த.வெ.க.வின் வேட்பாளர்கள், பிரச்சாரம் செய்ய முடியாத அளவிற்கு அத் தொகுதி மக்களால் ஓட ஓட விரட்டப்படுகின்றனர்.

இதனால் தோல்வி பயத்தில் இடைத்தேர்தல் நடைபெற உள்ள அந்த இரண்டு தொகுதிகளைச் சுற்றி சுற்றி முதலமைச்சர் விஜய் குட்டிக் கரணம் அடித்து வருகிறார். ஆனால் விஜயின் பொய்யுரைகளையும், சினிமா பஞ்ச் வசனங்களையும் கேட்க விரும்பாததால், மக்கள் கூட்டமின்றி விஜயின் பிரச்சாரம் காத்து வாங்குகிறது. ரோடு ஷோக்கள் எம்ப்டி ஷோக்களாக மாறி வருகிறது.

ஆனாலும் யாருமே இல்லாத கடையிலே யாருக்குயா டீ ஆத்துற என்ற கணக்கில், யாரும் இல்லாத வீதிகளில் வலம் வருகிறார் முதலமைச்சர் விஜய். கூட்டம் இல்லாதால் கடுப்பான விஜய், நிர்வாகிகளிடம் அதிருப்தி காட்ட, இன்று விஜயின் ரோடு ஷோ நடைபெறும் தாராபுரத்திற்கு, வெளியூர்களில் இருந்து ஆட்களை பணத்தை வாரி இறைத்து லாரி உள்ளிட்ட வாகனங்களில் த.வெ.க. நிர்வாகிகள் அழைத்து வந்துள்ளனர்.

இடைத்தேர்தல் நடைபெறும் மதுராந்தகத்தில்

அமைச்சர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் மின்வெட்டு!

சென்னை, அக். 5 - மதுராந்தகத்தில் அமைச்சர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் மின்வெட்டு ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

நிர்வாக திறனற்ற த.வெ.க. ஆட்சியில் தமிழ்நாடு முழுவதும் மின் வெட்டு தலைவிரித்தாடுகிறது.

அமைச்சர்கள் பங்கேற்கும் நிகழ்விலும் மின் வெட்டு தொடரும் அவலம் நீடிக்கிறது. இந்த நிலையில் மதுராந்தகம் சட்டமன்ற இடைத்தேர்தலை முன்னிட்டு, தவெக வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனைக் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் அமைச்சர்கள் ஆதவ் அர்ஜுனா, மரிய வில்சன், ராஜ்மோகன் உள்ளிட்ட அமைச்சர்கள் பங்கேற்றனர்.

கூட்டத்தில் திடீரென மின்தடை ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.



தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் தலைமையில் மாமன்ற உறுப்பினர்கள் தாராபுரம் தொகுதி காமராஜபுரம் வார்டு எண் 2, பூத் எண் 153 ஆகிய பகுதிகளில் சென்று தீவிரமாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.அவர்களுடன் தாராபுரம் சேர்மன் பாபு கண்ணன் மற்றும் மூத்த கழக நிர்வாகிகள் பங்கேற்று உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தனர்.

தாராபுரத்தில் மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ. வாக்குச் சேகரிப்பு!

திருப்பூர், அக். 5 – தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவிற்கு ஆதரவாக உதயசூரியன் சின்னத்திற்கு நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ.தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் வே.ஜெயபாலன், தென்காசி நகர் மன்ற தலைவர் சாதிர், கடையநல்லூர் நகர செயலாளர் அப்பாஸ் ஆகியோர் தாராபுரம் பேருந்து நிலையம் அருகில் உள்ள பள்ளிவாசலில் தொழுகை முடிந்து வெளியே வந்த இஸ்லாமியர் களிடம் தீவிரமாக வாக்கு சேகரித்தனர்.

இப்பணியில் தென்காசி நகர துணை செயலாளர் பால்ராஜ், நிர்வாகிகள் ராம்துரை, பொத்தை முருகன், கடையநல்லூர் நகர துணை செயலாளர் மஸ்தான் அலி, நிர்வாகிகள் ராஜா முகம்மது,அப்துல் மஜீத்,சேப் பிள்ளை அலி,முன்னாள் இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் ஹக்கீம் உட்பட பலர் பங்கேற்று வாக்கு சேகரித்தனர்.

தாராபுரம் சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிடும் கழக வெற்றி வேட்பாளர் வழக்கறிஞர் எஸ்.சுகன்யாவை ஆதரித்து திருநெல்வேலி மாநகராட்சி மேயர் கோ.ராமகிருஷ்ணன் தலைமையில் மாமன்ற உறுப்பினர்கள் தாராபுரம் தொகுதி காமராஜபுரம் வார்டு எண் 2, பூத் எண் 153 ஆகிய பகுதிகளில் சென்று தீவிரமாக உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.அவர்களுடன் தாராபுரம் சேர்மன் பாபு கண்ணன் மற்றும் மூத்த கழக நிர்வாகிகள் பங்கேற்று உதயசூரியன் சின்னத்துக்கு வாக்கு சேகரித்தனர்.